# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064849

1. District மாவட்டம் : Tiruvannamalai  PS: காவல்நிலையம் Vigilance And Anti-Corruption Tiruvannamalai Detachment.  Year: ஆண்டு 2020.  FIR No.: மு.த.அ. எண் 01/2020.  Date: நாள் 05.01.2020.

2. (i) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: P.C. Act 1988 as amended in Prevention of Corruption (Amendment) Act 2018.  Sections பிரிவுகள்: Section 7 of PC Act 1988 as amended in PC (Amendment) Act 2018

(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை  Prior to 1530 Hrs on 04.01.2020.

Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்  Time : நேரம் 05/01/2020 at 10.00 Hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் –  Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 20 km, South East

Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி Kilpennathur 110KV Sub Station at TANGEDCO Kilpennathur. Tiruvannamalai District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N. Devanathan  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் N. Natarajan

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1975  (d) Nationality நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Deputy Superintendent of Police Vigilance And Anti-Corruption Tiruvannamalai Detachment.  (g) Address : முகவரி O/o DSP, V&AC, Tiruvannamalai Detachment

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. T.R. Sivaraju age 57/2020 S/o Ramanujam, Chief Engineer, TANGEDCO, Villupuram Region. 2. T.A. Nagarajan, S/o Amaresan, Superintending Engineer, TANGEDCO Tiruvannamalai EDC. 3. T.R. Jeevanantham age 53/2020 S/o Renganathan Assistant Executive Engineer (Civil) TANGEDCO, Tiruvannamalai 4. T.M. Shanmugam age 53/2020 S/o Mani, Driver of TN25 BA 0344, Vehicle of SE/TANGEDCO/TVMalai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— 0

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station (FS · [signature] 5/1/2020)
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் N. DEVANATHAN
Rank: நிலை DSP ...........No. எண் ..........

On 05.01.2020 at 11.00 Hrs.

Deputy Superintendent of Police
Vigilance and Anti Corruption
Tiruvannamalai.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

ிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 05.01.2020- ஆம் தேதி ந.தேவநாதன், காவல்துணைக் கண்காணிப்பாளர், திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகிய நான் என்னுடைய அலுவலக பணியில் இருந்தபோது, கடந்த 04.01.2020 - ஆம் தேதி திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவலம் - திருக்கோவிலூர் சாலையில் அமைந்துள்ள வேட்டவலம் ஆரம்ப சுகாதார நிலையம் முன்பாக பிற்பகல் 15.30 மணிமுதல் மாலை 17.30 மணிவரை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைமை பொறியாளர், விழுப்புரம் மண்டலம், மேற்பார்வை பொறியாளர், திருவண்ணாமலை மாவட்டம், செயற்பொறியாளர், திருவண்ணாமலை கிழக்கு பிரிவு ஆகியோரின் அரசு வாகனங்கள் முறையே TN-32 AJ 0049, வெண்ணிற Scorpio வாகனம், வெண்ணிற Indico TN 25 BA 0344 மற்றும் வெளிர் நீலநிற Trax TN 25 A 9629 ஆகியவற்றில் நடத்தப்பட்ட திடீர்சோதனையை தொடர்ந்து தயாரிக்கப்பட்ட, திடீர்சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறையின் பேரில், இன்று 05.01.2020- ஆம் தேதி காலை 10.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபட்டது. கடந்த 04.01.2020-ஆம் தேதி நடத்தப்பட்ட திடீர்சோதனை குறித்த செயல்முறையின் விவரம் பின்வருமாறு:- காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு, திருவண்ணாமலை பிரிவு அவர்களால், அரசு சாட்சிகள் முன்பு வேட்டவலம்-திருக்கோவிலூர் ரோடு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் முன்பாக தலைமை பொறியாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம், விழுப்புரம் மண்டலம், அரசு வாகனம் TN 32 AJ 0049 என்ற வாகனத்தை இன்று 04.01.2020-ஆம் தேதி பிற்பகல் 15.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறை:- முன்னிலை1.திரு.ந.தேவநாதன், காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை 2.திரு.மு.அசோக்குமார், வயது.45/2020, த/பெ முருகேசன், வருவாய் ஆய்வாளர்,வேட்டவலம் உள்வட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம்,திருவண்ணாமலை மாவட்டம். 3.திரு.ப.வெங்கடேசன், வயது.50/2020, த/பெ பச்சையப்பன்,கிராம நிர்வாக அலுவலர்,வேட்டவலம், கீழ்பென்னாத்தூர் வட்டம்,திருவண்ணாமலை மாவட்டம்.திரு.இரா.சிவராஜு, தலைமை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், விழுப்புரம் மண்டலம் அவர்கள் இன்று 04.01.2020-ஆம் தேதி பகல் 11.00 மணிக்கு திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் 110KV துணை மின் நிலையத்தில் 25MVA திறன் மின்மாற்றி நிறுவுவதற்காகவும், வேட்டவலம் பிரிவில் புதியதாக 400KV துணை மின் நிலையம் நிறுவ உத்தேசியக்கப்பட்டுள்ள இடத்தை பார்வையிட வந்திருப்பதாகவும், அவ்வமையம் 2020-ஆங்கில வருடப்பிறப்பை முன்னிட்டு திருவண்ணாமலை மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக மேற்பார்வை பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரிடம் அன்பளிப்பாக தங்க நாணயங்கள் மற்றும் கையூட்டு

பணம் பெறப்போவதாகவும், இன்று பகல் சுமார் 13.00 மணியளவில் கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் காவல் துணை கண்காணிப்பாளர், திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அவர்கள் மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய போது தான் தற்போது திண்டுக்கல்லில் இருப்பதாகவும், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரை கலந்து ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார். அதன்படி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது அவரது செல்போன் அணைத்து வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாகவும் இந்த திடீர் ஆய்வினை மேற்கொண்டு தாமதப்படுத்த இயலாது என்ற காரணத்தினால் கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் அவர்களை தொடர்பு கொண்டு இரண்டு அரசு அலுவலர்களை திடீர் ஆய்வுக்காக சாட்சிகளாக இருக்க நியமித்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி குழுவினருடன் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து பிற்பகல் 13.45 மணிக்கு புறப்பட்டு பிற்பகல் 14.30 மணிக்கு கீழ்பென்னாத்தூர் 110KV துணை மின் நிலையத்தின் முன்பாக கண்காணித்த போது தலைமை பொறியாளர், மேற்பார்வை பொறியாளர், செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர் மேற்படி கீழ்பென்னாத்தூர் துணை மின் நிலையத்தில் 25MVA திறன் மின் மாற்றி நிறுவும் பணியை முடித்து கீழ்பென்னாத்தூர் திண்டிவனம் சாலையில் உள்ள உணவகத்தில் உணவு அருந்திய பின்பு கீழ்பென்னாத்தூரில் இருந்து வேட்டவலம் வழியாக விழுப்புரம் செல்ல இருப்பதாகவும் கிடைத்த தகவலின் பேரில் கீழ்பென்னாத்தூர் திண்டிவனம் சாலையில் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. விழுப்புரம் மண்டலம் தலைமை பொறியாளர் அவர்களுடைய அரசு வாகனம் TN 32 AJ 0049 வெண்ணிற Scorpio வாகனத்தை கண்காணித்த போது சுமார் 15.00 மணியளவில் கீழ்பென்னாத்தூர் திண்டிவனம் சாலையில் ஒரு உணவகத்தில் இருந்து மேற்கண்ட வாகனம் மற்றும் அதனுடன் வெண்ணிற Indico TN 25 BA 0344, TN 25 A 9629 Trax, ஆகிய இரண்டு வாகனங்கள் பின்தொடர கீழ்பென்னாத்தூரில் இருந்து சாணிப்பூண்டி சாலை வழியாக வேட்டவலம் நோக்கி புறப்பட்டுச்சென்றது. அவ்வாகனங்களை பின்தொடர்ந்து வந்து சாணிப்பூண்டி, ஆவூர், வழியாக வேட்டவலத்தை கடந்து திருக்கோவிலூர் சாலை வழியாக விழுப்புரம் நோக்கி சென்று கொண்டிருந்த வாகனத்தை கடந்து வேட்டவலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முன்பாக மேற்கண்ட வாகனங்களை நிறுத்தச்செய்து பிற்பகல் 15.30 மணிக்கு மேற்படி TN 32 AJ 0049 Scorpio வாகனத்தில் ஓட்டுநருக்கு பின்னால் உள்ள நடு இருக்கையில் இடது பக்கமாக அமர்ந்திருந்த நபரிடம் காவல் துணைக்காணிப்பாளர் அவர்கள் தன்னை அறிமுகம் செய்து கொண்டும் தன்னுடன் வந்த காவலர்கள் குழுவினர்களை அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து கொண்டார். அதேபோல் தன்னுடன் வந்த அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்து வைத்தார். மேலும் தன்னையும் தன் குழுவினரையும் சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டும் தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று

ஓலுவலர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. மேற்கண்ட வாகனத்தின் நடு இருக்கையின் இடது பக்கத்தில் அமர்ந்திருந்த நபரை காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் சிவராஜு என்றும் தான் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் விழுப்புரம் மண்டல தலைமை பொறியாளராக பணிபுரிவதாகவும், வலது பக்கம் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.நாகராஜன் என்றும் தான் திருவண்ணாமலை மாவட்ட மேற்பார்வை பொறியாளராக பணிபுரிவதாகவும் கூறினார்கள். காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் அவர்களிடம் திடீர் சோதனை நடத்த இருப்பதாகவும் கூறி சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட சோதனையில் அரசு வாகனம் TN 32 AJ 0049 என்ற வாகனத்தில் பின் இருக்கையில் சோதனையிட்ட போது இருக்கையின் கீழ் பகுதியில் பிளாஸ்டிக் பையில் பணம் ரூ.54,000/-, ஒரு தங்க நாணயம், சால்வைகள்-10, கருநீல நிற பேண்ட் பிட்-1 மற்றும் வெள்ளை நிற சர்ட் பிட்-1, வெள்ளை நிற துணியில் சாம்பல் மற்றும் வெளிர் நீல நிற கோடு போட்ட சர்ட் பிட்-1 ஆகியன இருந்தது. மேற்கண்ட பணம் ரூ.54,000/- மற்றும் தங்க நாணயம், சால்வைகள் மற்றும் துணிகள் ஆகியவற்றை பற்றி விசாரிக்க தகுந்த முகாந்திரம் கூறாததால் அவற்றை அரசு சாட்சிகள் முன்பு கைப்பற்றப்பட்டது. மேலும் தலைமை பொறியாளர் திரு.சிவராஜு என்பவரை சோதனையிட அவர் தன்னுடைய இடது பக்க சட்டையின் மேல்பாக்கெட்டில் ஒரு 500 ரூபாய் தாளும், இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்த மணிபர்சில் இரண்டு 500 ரூபாய் தாள்களை எடுத்து ஆஜர் செய்தார். அதைப்பற்றி விசாரிக்க தன்னுடைய கையிருப்பு செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அதை அவரிடமே அரசு சாட்சிகள் முன்பு ஒப்படைக்கப்பட்டது. மேற்படி தங்க நாணயத்தினை வேட்டவலம் கடை வீதியில் உள்ள ஸ்ரீஐஸ்வர்யம் நகை அடகு கடையில் எடையிட்டு பார்த்ததில் 8 கிராம் எடை உள்ளது என சான்றளித்தார்.

விழுப்புரம் மண்டல தலைமை பொறியாளர் திரு.இரா.சிவராஜு என்பவர் பயணம் செய்த Scorpio வாகனம் TN 32 AJ 0049 இருந்து தகுந்த முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் பொருட்களின் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | 2000 X 15 | 30,000 |
| 2. | 500 X 48 | 24,000 |
| | **மொத்தம்** | **54,000** |
| 3. | தங்க நாணயம் - 1 | 8 கிராம் |
| 4. | சால்வைகள் | 10 |
| 5. | வெள்ளை நிற சர்ட் பிட் | 1 |
| 6. | வெள்ளை நிற துணியில் சாம்பல் மற்றும் வெளிர் நீல நிற கோடு போட்ட சர்ட் பிட் | 1 |
| 7. | கரு நீல நிற பேண்ட் பிட் | 1 |

மேற்படி Scorpio வாகனம் TN 32 AJ 0049 என்ற வாகனத்தின் நடு இருக்கையில் தலைமை பொறியாளர் திரு.இரா.சிவராஜ்® என்பவருக்கு வலது பக்கத்தில் அமர்ந்திருந்த திரு.அ.நாகராஜன் என்பவரிடம் சோதனை செய்ய அவர் தான் அணிந்திருந்த பேண்ட்டின் வலது பாக்கெட்டில் இருந்து ரு.4,900/- பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதைப்பற்றி விசாரிக்க அவர் தன்னுடைய கை செலவிற்காக வைத்திருந்தாக கூறினார். அதை தவிர வேறு எந்த பொருளும் அவரிடம் இல்லை. மேற்படி பணம் ரு.4,900/- அரசு சாட்சிகள் முன்பு அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அடுத்த வாகனம் TN 25 BA 0344 வெண்ணிற Indico வாகனத்தில், அவ்வாகனத்தின் ஓட்டுநருக்கு இடது பக்கத்தில் முன்பக்க இருக்கை மற்றும் அவ்வாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த நபர்களிடம் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் தன்னையும் தன் குழுவினர் மற்றும் அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்து கொண்டு, அவர்களை பற்றி விசாரிக்க, முன் இருக்கையில் அமர்ந்திருந்த நபர் தன்னுடைய பெயர் சரவணன் என்றும் தான் திருவண்ணாமலை மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளராக (பொது) பணிபுரிவதாகவும் கூறினார். அவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய சட்டையின் இடது புற மேல் பாக்கெட்டில் இருந்த பணம் ரு.1,000/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி விசாரிக்க அவர் தன் கை செலவிற்காக வைத்திருப்பதாகவும் கூறியதன் பேரில் அரசு சாட்சிகள் முன்பு திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி வாகனத்தின் பின் இருக்கையின் வலது பக்க இருக்கையில் அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தன் பெயர் ராஜசேகரன் என்றும் தான் திருவண்ணாமலை கிழக்கு பிரிவில் செயற்பொறியாளராக பணிபுரிந்து வருவதாகவும், அரசு சாட்சிகள் முன்பு சோதனை செய்ய தன்னுடைய சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரு.1,400/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி விசாரிக்க அவர் தன்னுடைய கை செலவிற்கு வைத்திருப்பதாக கூறியதன் பேரில் அரசு சாட்சிகள் முன்பு திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அவ்வாகனத்தின் பின்புற இருக்கையின் இடது பக்கத்தில் அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தன் பெயர் ஜீவானந்தம் என்றும் தான் திருவண்ணாமலை வேங்கிக்கால் மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளராக (கட்டிடவியல்) பணிபுரிவதாகவும் கூறினார். திரு.ஜீவானந்தம் என்பவரை சோதனை செய்ய தான் அணிந்திருந்த பேண்ட்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்த பணம் ரு.10,000/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி விசாரிக்க சரியான முகாந்திரம் கூறாததால் விசாரணை நிமித்தமாக அரசு சாட்சிகள் முன்பு மேற்படி பணம் ரு.10,000/- கைப்பற்றப்பட்டது. அதன் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | 500 X 20 | 10,000 |
| | **மொத்தம்** | **10,000** |

மேலும் அவ்வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் பற்றி விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் மணி என்றும் தான் மேற்பார்வை பொறியாளர் வாகனத்தின் ஓட்டுநராக பணிபுரிவதாகவும் கூறினார். அவரிடம் சோதனை செய்ய அவருடைய பேண்ட்டின் பின்புற பாக்கெட்டில் மணிபர்சில் இருந்து ரூ.9,000/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி விசாரிக்க அவரால் தகுந்த முகாந்திரம் கூறாததால் விசாரணை நிமித்தமாக அரசு சாட்சிகள் முன்பு ரூ.9,000/- கைப்பற்றப்பட்டது. அதன் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | 2000 X 1 | 2,000 |
| 2. | 500 X 7 | 3,500 |
| 3. | 200 X 7 | 1,400 |
| 4. | 100 X 17 | 1,700 |
| 5. | 50 X 8 | 400 |
| | மொத்தம் | **9,000** |

மேற்படி TN 25 BA 0344 வெள்ளை நிற வாகனத்தை சோதனை செய்ய அந்த வாகனத்தில் பணமோ மற்றும் பொருட்களோ ஏதும் இல்லை.

மேற்படி வெள்ளை நிற TN 25 BA 0344 Indico என்ற வாகனத்திற்கு அடுத்ததாக வந்த வெளிர் நீல நிற TN 25 A 9629 Trax என்ற வாகனத்தை காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் தன்னையும் தனது குழுவினர் மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோரை அறிமுகம் செய்து கொண்டு விசாரணை செய்ய அவ்வாகனத்தின் முன்பக்க இருக்கையின் ஓட்டுநர் இடது பக்கத்தில் அமர்ந்திருந்த நபர் தன் பெயர் பத்மாவதி என்றும் தான் இராஜந்தாங்கல் கிராமத்தில் உதவி செயற்பொறியாளராக (இயக்குதல் மற்றும் பராமரித்தல்) பணிபுரிவதாகவும் கூறினார். அவரை காவல் ஆய்வாளர் திருமதி.கோ.மைதிலி அவர்கள் உதவியுடன் ஆரம்ப சுகாதார நிலையத்தின் அருகில் மறைவான இடத்தில் சோதனை செய்ய அவரிடத்தில் பணமோ மற்றும் பொருட்களோ ஏதும் இல்லை. அவ்வாகனத்தின் ஓட்டுநரை விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் கிருஷ்ணன் என்றும் தான் திருவண்ணாமலை மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் உள்ள திருவண்ணாமலை கிழக்கு பிரிவில் செயற்பொறியாளர் அவர்களின் அரசு வாகன TN 25 A 9629 Trax என்ற வாகனத்தின் ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். அரசு சாட்சிகள் முன்பு அவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய பேண்ட்டின் வலது புற பாக்கெட்டில் இருந்த ரூ.150/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி விசாரிக்க அவர் தன்னுடைய கை செலவிற்கு வைத்துள்ளதாக கூறியதன் பேரில் அரசு சாட்சிகள் முன்பு திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவ்வாகனத்தின் முழு பகுதிகளையும் சோதனையிட அதில் பணமோ, பொருட்களோ ஏதும் இல்லை.

இதன்பின்பு திடீர் ஆய்வு மகஜர் தயார் செய்யும் பொருட்டு அருகில் உள்ள வேட்டவலம்-திருக்கோவிலூர் சாலையில் உள்ள சொரத்தூர் கிராமத்தில் உள்ள வேட்டவலம் நகர பிரிவு அலுவலகத்திற்கு அலுவலர்கள் மற்றும் வாகனசகிதம் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் தொகையுடன் வரப்பட்டது. பின்பு கணினி உதவியுடன் மகஜர் 17.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.இந்த திடீர் சோதனையின் போது யாருக்கும் மனதளவிலோ, உடலளவிலோ எந்த துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. மேலும், அவ்வாகனங்களின் எந்த பகுதிக்கும், பொருட்களுக்கோ எந்தவித சேதமும் ஏற்படுத்தவில்லை.இந்த திடீர் சோதனை இன்று 04.01.2020-ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த செயல்முறையின் நகல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், விழுப்புரம் மண்டல தலைமை பொறியாளர் திரு.இரா.சிவராஜூ அவர்களுக்கு வழங்கப்பட்டது. மேற்கண்டவாறு நடத்தப்பட்ட திடீர்சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூபாய் 73,000/- (எழுபத்தி மூன்று ஆயிரம் மட்டும்) கையூட்டு என்று சொல்லப்படும் இலஞ்சப்பணம் என்று கருதபடுவதாலும், கைப்பற்றப்பட்ட 8-கிராம் தங்கநாணயம்-1 சால்வைகள்-10, மற்றும் வெள்ளை நிற சர்ட்பிட்-1, வெள்ளை நிறதுணியில் சாம்பல் மற்றும் வெளிர்நீலநிற கோடுபோட்ட சர்ட்பிட்-1 மற்றும் கருநீலநிற பேண்ட்பிட்-1 ஆகியன 2020-ஆம் ஆண்டு ஆங்கில புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு பெறப்பட்ட இலஞ்சம் மற்றும் அன்பளிப்பு பொருட்கள் என கருதப்படுவதாலும் திரு.இரா.சிவராஜூ,தலைமை பொறியாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், விழுப்புரம் மண்டலம், 2.திரு.அ.நாகராஜன், மேற்பார்வைபொறியாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், திருவண்ணாமலை மாவட்டம், 3.திரு.ர.ஜீவானந்தம், உதவி செயற்பொறியாளர், (கட்டிடவியல்), திருவண்ணாமலை மற்றும் 4.திரு.ம.சண்முகம், ஓட்டுநர், மேற்பார்வை பொறியாளரின் அரசு வாகனம் வெண்ணிற Indico பதிவு எண். TN 25 BA 0344 ஆகியோர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டி இன்று 05.01.2020-ஆம் தேதி காலை 10.00 மணிக்கு திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2020, சட்டப் பிரிவு 7 ஊழல்தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018-ன் படி வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல் நகல் மற்றும்- திடீர்சோதனை நடவடிக்கைகள் குறித்து தயார் செய்யப்பட்ட செயல்முறை, சாட்சிகள் மற்றும் எதிரிகளின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்து கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்களுக்கும், மேற்கண்ட ஆவணங்களின் நகல்களை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

[signature] 5.1.2020

காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருவண்ணாமலை.